சுகாதார அமைச்சகம்

# COVID-19 தடுப்பூசி தகவல் தாள்

பதிப்பு 5.0 – ஏப்ரல் 1, 2021

இந்த ஆவணம் அடிப்படைத் தகவல்களை மட்டுமே வழங்குகிறது, மேலும் மருத்துவ ஆலோசனை, நோய் கண்டறிதல் அல்லது சிகிச்சை அல்லது சட்ட ஆலோசனையை வழங்குவதற்கு அல்லது அதற்கான நோக்கம் கொண்டது அல்ல.

இன்றுவரை, பின்வரும் COVID-19 தடுப்பூசிகளைக் கனடாவில் பயன்படுத்துவதற்கு ஹெல்த் கனடா அங்கீகரித்துள்ளது: ஃபைசர்-பயோஎன்டெக் COVID-19 தடுப்பூசி, மாடர்னா COVID-19 தடுப்பூசி, அஸ்ட்ராஜெனிகா COVID-19 தடுப்பூசி, கோவிஷீல்ட் COVID-19 தடுப்பூசி , மற்றும்ஜான்சன் COVID-19 தடுப்பூசி. கனடாவுக்கு விநியோகம் உறுதி செய்யப்பட்டவுடன் ஜான்சன் COVID-19 தடுப்பூசி பற்றிய தகவல்கள் இந்த ஆவணத்தில் சேர்க்கப்படும். கனடாவில் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட COVID-19 க்கான அனைத்து தடுப்பூசிகளும் கடுமையான தரநிலைகளைப் பயன்படுத்தி ஹெல்த் கனடாவால் மதிப்பிடப்பட்டுள்ளன. அனைத்து தடுப்பூசிகளும் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்ய ஹெல்த் கனடா தொடர்ந்து கண்காணிக்கும்.

**தயவுசெய்து இந்த தகவல் தாளைக் கவனமாகப் படித்து, தடுப்பூசியைப் பெறுவதற்கு முன்பு உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் ஒரு சுகாதார வழங்குநர் பதிலளித்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.**

## COVID-19 என்பது என்ன?

COVID-19 என்பது ஒரு புதிய கொரோனா வைரஸ் (SARS-CoV-2) மூலம் ஏற்படும் ஒரு தொற்றுநோய் ஆகும். COVID-19 டிசம்பர் 2019 இல் முதல் முறையாக கண்டறியப்பட்டது மற்றும் அன்றிலிருந்து ஒரு பெருந்தொற்றை ஏற்படுத்த உலகம் முழுவதும் பரவியுள்ளது. COVID-19 முக்கியமாக ஒரு பாதிக்கப்பட்ட நபர் இருமல், தும்மல், பாடுதல், பேச்சு அல்லது மூச்சுவிடும் போது அவரிடமிருந்து மற்றவர்களுக்கு பரவுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிகுறிகள் இல்லாவிட்டாலும் கூட அவர்கள்

நோய்த்தொற்றைப் பரப்ப முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். COVID-19 அறிகுறிகளில் இருமல், மூச்சுத் திணறல், காய்ச்சல், குளிர், சோர்வு மற்றும் வாசனை அல்லது சுவை இழப்பு ஆகியவை அடங்கும். வைரஸால் பாதிக்கப்பட்ட சிலருக்கு அறிகுறிகளே இல்லாமல் இருக்கலாம், மற்றவர்கள் லேசானது முதல் கடுமையானது வரை அறிகுறிகளைக் கொண்டுள்ளனர்.

## COVID-19 தடுப்பூசிகள் COVID-19 க்கு எதிராக எவ்வாறு பாதுகாக்கிறது?

அனைத்து தடுப்பூசிகளும் நம் உடலுக்கு நோய்த்தொற்று போன்ற ஒன்றை வழங்குவதன் மூலம் வேலை செய்கின்றன, இதனால் நமது நோயெதிர்ப்பு மண்டலம் இயற்கை நோயெதிர்ப்பு சக்தியை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் கற்றுக்கொள்ள முடியும். இந்த இயற்கை பாதுகாப்பு, எதிர்காலத்தில் COVID-19 வைரஸுடன் தொடர்பு கொண்டால், எதிர்காலத்தில் ஏற்படும் நோயைத் தடுக்க உதவுகிறது. **தடுப்பூசி மூலம் உங்களுக்கு COVID-19 வராது.**

COVID-19 தடுப்பூசிகள் எவ்வாறு பாதுகாப்பை வழங்குகின்றன என்பது பற்றிய விரிவான தகவல்களை பொது சுகாதார ஒன்ராறியோவின் (PHO) COVID-19 தடுப்பூசிகள் வலைப்பக்கத்தில் காணலாம் மற்றும் COVID-19 தடுப்பூசி மற்றும்COVID-19 தடுப்பூசிகள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை: வைரஸ் வெக்டர் சார்ந்த தடுப்பூசிகள்.

**கனடாவில் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து COVID-19 தடுப்பூசிகளும் அறிகுறியுள்ள, ஆய்வக உறுதிப்படுத்தப்பட்ட நோயிலிருந்து பாதுகாப்பதில் பயனுள்ளதாக இருக்கிறது.**
தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் மக்களுக்கு வழங்கப்பட்டு நடத்தப்பட்ட பெரிய ஆய்வுகளில், அனைத்து தடுப்பூசிகளும் அறிகுறியுள்ள, ஆய்வக உறுதிப்படுத்தப்பட்ட COVID-19 நோய்த்தொற்றால் மக்கள் நோய்வாய்ப்படுவதைத் தடுப்பதில் மிகவும் நன்றாக வேலை செய்தன. தடுப்பூசியின் செயல்திறன் முதலாவது டோஸ் எடுத்த 14 நாட்களுக்குப் பிறகு மற்றும் இரண்டாவது டோஸ் எடுப்பதற்கு முன் ஃபைசர்-பயோஎன்டெக் மற்றும் மாடர்னாவிற்கு 90% க்கும் அதிகமாகவும், அஸ்ட்ராஜெனெகா / கோவிஷீல்டிற்கு 70% க்கும் அதிகமாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட இடைவெளியில்

இரண்டாவது டோஸ் எடுத்தப் பிறகு தடுப்பூசி செயல்திறன் ஃபைசர்-பயோஎன்டெக் மற்றும் மாடர்னாவுக்கு 90% க்கும் அதிகமாகவும், அஸ்ட்ராஜெனிகா / கோவிஷீல்டுக்கு 80% க்கும் அதிகமாகவும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசிகளின் இரண்டு டோஸ்களையும் நீங்கள் பெறுவது முக்கியம்). இரண்டாவது டோஸ் தடுப்பூசி பெறப்படும் வரை COVID-19 க்கு எதிரான நீண்டகால பாதுகாப்பு அடைய முடியாது. **கனடாவில் பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட COVID-19 தடுப்பூசிகள் அனைத்தும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதைத் தடுப்பதில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.**

## இந்த தடுப்பூசிகளை யார் பெற முடியும்?

தடுப்பூசிக்கு எதிராக அறிகுறிகள் இல்லாதவர்கள் மற்றும் தற்போது அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை குழுக்களில் இருப்பவர்களுக்கு ஒரு முழுமையான தடுப்பூசி வரிசைகள் வழங்கப்பட வேண்டும்.

- ஃபைசர்-பயோஎன்டெக் COVID-19 தடுப்பூசி தற்போது 16 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மாடர்னா COVID-19 தடுப்பூசி தற்போது 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அஸ்ட்ராஜெனிகா COVID-19 தடுப்பூசி மற்றும் கோவிஷீல்ட் தற்போது 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில், தடுப்பூசி க்கான தேசிய ஆலோசனைக் குழு (NACI) பரிந்துரைப்பது என்னவென்றால் அஸ்ட்ராஜெனிகா COVID-19 தடுப்பூசி மற்றும் கோவிஷீல்ட் ஆகியவற்றை 55 வயதிற்குட்பட்ட பெரியவர்களில் பயன்படுத்தக்கூடாது.

முன்னுரிமைஅடிப்படையில் இந்த நேரத்தில் தடுப்பூசியைப் பெறுவதற்கு நீங்கள் தகுதியுள்ளவரா என்பதைக் கண்டறியப் பார்க்கவும் ஒன்ராறியோவின் COVID-19 தடுப்பூசித் திட்டம்.

## தடுப்பூசியைப் பெறுவதற்கு முன், உங்களுக்கு தடுப்பூசி வழங்கும் சுகாதார வழங்குநரிடம் பின்வருவனவற்றைத் தெரிவிக்கவும்:

- உங்களுக்கு தற்சமயம் உடல்நிலை சரியில்லை அல்லது COVID-19 இன் அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள் தென்படுகிறது.
- COVID-19 தடுப்பூசி அல்லது அல்லது தடுப்பூசிகளில் உள்ள ஏதேனும் உட்பொருட்களின் காரணமாக முன்பு உங்களுக்கு ஒவ்வாமையை ஏற்பட்டிருக்கிறது.
- உங்களுக்கு ஒவ்வாமை அல்லது ஒவ்வாமை பிரச்சனைகள் இருக்கிறது.
- நீங்கள் கர்ப்பமாக இருக்கலாம் அல்லது தாய்ப்பால் கொடுக்கிறீர்கள்.
- நோய் அல்லது சிகிச்சை காரணமாக உங்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது அல்லது ஒரு ஆட்டோ இம்யூன் பிரச்சனை உங்களுக்கு இருப்பது கண்டறியப்படுகிறது.
- கடந்த கால தடுப்பூசி அல்லது மருத்துவ செயல்முறையைப் பெற்ற பிறகு நீங்கள் மயக்கமடைந்தீர்கள் அல்லது தலைசுற்றல் ஏற்பட்டது அல்லது உங்களுக்கு ஊசிகள் போடுவதில் பயம் உள்ளது. சுகாதார வழங்குநர் உங்களுக்கு உதவிட ஆதரவு அளிக்கலாம், எடுத்துக்காட்டாக, மயக்கம் ஏற்படாமலிருக்க உங்களை படுக்கவைத்து தடுப்பூசியைப் பெறுவதற்குப் பரிந்துரைப்பது.
- உங்களுக்கு இரத்தப்போக்கு கோளாறு உள்ளது அல்லது இரத்தம் உறைவதை பாதிக்கக்கூடிய மருந்துகளை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த தகவல் சுகாதார வழங்குநருக்கு ஊசி மூலம் இரத்தப்போக்கு அல்லது சிராய்ப்பு நிகழ்வதைத் தடுக்க உதவும்.
- கடந்த 14 நாட்களில் வேறு ஏதேனும் தடுப்பூசியை (COVID-19 தடுப்பூசி அல்ல) நீங்கள் பெற்றுள்ளீர்கள்.

சிறப்பு மக்கள்தொகை வழிகாட்டல் ஆவணத்திற்கான தடுப்பூசி பரிந்துரைகள் தாய்ப்பால் கொடுக்கும் அல்லது கர்ப்பமாக இருப்பவர்கள், ஒவ்வாமை, ஆட்டோ இம்யூன் நிலைமைகள் அல்லது நோய் அல்லது சிகிச்சை காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், அத்துடன் COVID-19 இன் கடுமையான விளைவுகளுக்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்தில் உள்ள இளம் பருவத்தினருக்கு கூடுதல் தகவல்களை வழங்குகிறது. உங்கள் மருத்துவ நிலையின் அடிப்படையில் தடுப்பூசி

உங்களுக்கு சரியானதா என்பது பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், உங்கள் சுகாதார வழங்குநருடன் பேசுங்கள்.

# இந்த தடுப்பூசிகளைப் பெறுவதை யார் தாமதப்படுத்த வேண்டும்?

- கடந்த14 நாட்களில் மற்றொரு தடுப்பூசி (COVID-19 தடுப்பூசி அல்ல) பெற்ற நபர்கள்.
- ஒரு கடுமையான நோய் அறிகுறிகளைக் கொண்ட நபர்கள்; நோயின் விளைவாக ஏற்படும் எந்தவொரு பிரச்சனைகளையும் தடுப்பூசி தொடர்பான பக்கவிளைவுகளுக்குத் தொடர்புபடுத்திக் கூறுவதைத் தவிர்ப்பதற்காக அறிகுறிகள் முழுமையாக தீரும் வரை இந்த நபர்கள் காத்திருக்க வேண்டும்.
- COVID-19 அறிகுறிகள் உள்ள நபர்கள். COVID-19 பரவும் ஆபத்தைக் குறைக்க, இந்த நபர்கள் ஒரு நோய்த்தடுப்பு மருந்து வழங்கப்படும் கிளினிக்/இடத்திற்கு வந்தால், தற்போதைய உள்ளூர் பொது சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுவார்கள் மற்றும் பரிசோதனை செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள்.
- COVID-19 நோய்த்தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட அல்லது கோCOVID-19 நோயாளியுடன் நெருங்கிய தொடர்பு காரணமாக தங்களைத் தனிமைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்ட அறிகுறியுள்ள மற்றும் அறிகுறியற்ற நபர்கள் ஒரு தடுப்பூசி வழங்கும் கிளினிக்கில் கலந்து கொள்ளக்கூடாது மற்றும் அவர்களின் தனிமைப்படுத்தப்பட்ட காலம் முடியும் வரை தங்கள் தடுப்பூசியைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டும்.

# தடுப்பூசி எவ்வாறு வழங்கப்படுகிறது?

இந்த தடுப்பூசி கையின் மேல்பகுதியில் (டெல்டோய்ட் தசைக்குள்) ஊசி மூலம் செலுத்தப்படுகிறது. ஃபைசர்-பயோஎன்டெக், மாடர்னா மற்றும் அஸ்ட்ராஜெனிகா/ கோவிஷீல்ட் தடுப்பூசிகளுக்கான COVID-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸின் கால இடைவெளியை முதல் டோஸுக்குப் பிறகு 4 மாதங்கள் வரை நீட்டிக்க நோய்த்தடுப்புக்கான தேசிய ஆலோசனைக் குழுவின் (NACI) பரிந்துரைகளை இந்த மாகாணம் பின்பற்றி வருகிறது .

- ஃபைசர்-பியோஎன்டெக் தடுப்பூசிக்கு, இரண்டாவது டோஸுக்குப் பரிந்துரைக்கப்படும் கால இடைவெளி முதல் டோஸ் போடப்பட்டு 4 மாதங்களுக்கு பிறகாகும்.
- மாடர்னா தடுப்பூசிக்கு, இரண்டாவது டோஸுக்குப் பரிந்துரைக்கப்படும் கால இடைவெளி முதல் டோஸ் போடப்பட்டு 4 மாதங்களுக்கு பிறகாகும்.
- அஸ்ட்ராஜெனிகா மற்றும் கொவிஷீல்ட் தடுப்பூசிக்கு, இரண்டாவது டோஸுக்குப் பரிந்துரைக்கப்படும் கால இடைவெளி முதல் டோஸ் போடப்பட்டு 4 மாதங்களுக்கு பிறகாகும்.

மக்கள் தங்கள் முழு தடுப்பூசி தொடருக்கும் அதே COVID-19 தடுப்பூசி தயாரிப்பைப் பெற வேண்டும் (அதாவது நபர் தங்கள் முதல் மற்றும் இரண்டாவது டோஸ்களுக்கு அதே தடுப்பூசியைப் பெற வேண்டும்). வேறுபட்ட வகைகளைக் கொண்ட தடுப்பூசிகளை (எ.கா. mRNA, வைரஸ் வெக்டார்) வெவ்வேறு தடுப்பூசிகளாகக் கருத வேண்டும் மற்றும் அவைகளை ஒரே தொடரில் பயன்படுத்தப்படக்கூடாது.

## தடுப்பூசிகளில் உள்ள உட்பொருட்கள் யாவை?

| உட்பொருட்கள் | ஃபைசர்-பயோஎன்டெக் | மாடர்னா | அஸ்ட்ராஜெனிகா/ மற்றும் கோவிஷீல்ட் |
|---|---|---|---|
| மருத்துவம் | • mRNA | • mRNA | • இன்ப்பெருக்கம் ஆகாத வைரஸ் திசையன் (ChAd) |

| உட்பொருட்கள் | | ஃபைசர்-பயோஎன்டெக் | மாடர்னா | அஸ்ட்ராஜெனிகா/ மற்றும் கோவிஷீல்ட் |
|---|---|---|---|---|
| மருத்துவம் அல்லாதது | லிப்பிடுகள் | • ALC-0315<br>• ALC-0159 - ஒரு பாலிஎதிலீன் கிளைகோல் (PEG)<br>• 1,2-டிஸ்டேராயில்-எஸ்என்-கிளிசரோ -3-பாஸ்போகோலின் (DSPC)<br>• கொழுப்பு | • 1,2-டிஸ்டேராயில்-எஸ்என்-கிளிசரோ -3-பாஸ்போகோலின் (DSPC)<br>• கொழுப்பு<br>• PEG2000 DMG SM-102 | • டிஸோடியம் எடிடேட் டைஹைட்ரேட் (EDTA)<br>• எத்தனால்<br>• எல் - ஹிஸ்டைடின்<br>• எல் - ஹிஸ்டைடின் ஹைட்ரோகுளோரைடு மோனோ ஹைட்ரேட்<br>• பாலிசார்பேட் 80 |
| | உப்புகள் | • டைபாசிக் சோடியம் பாஸ்பேட் டைஹைட்ரேட்<br>• மோனோபேஸிக் பொட்டாசியம் பாஸ்பேட்<br>• பொட்டாசியம் குளோரைடு<br>• சோடியம் குளோரைடு | • அசிடிக் அமிலம்<br>• சோடியம் அசிடேட் ட்ரைஹைட்ரேட்<br>• ட்ரோமெத்தமைன்<br>• ட்ரோமெத்தமைன் ஹைட்ரோகுளோரைடு | • மெக்னீசியம் குளோரைடு ஹெக்ஸா ஹைட்ரேட்<br>• சோடியம் குளோரைடு |
| | சர்க்கரை | • சுக்ரோஸ் | • சுக்ரோஸ் | • சுக்ரோஸ் |
| | | • ஊசிக்கு தண்ணீர் | • ஊசிக்கு தண்ணீர் | • ஊசிக்கு தண்ணீர் |

**பாலிஎத்திலின் கிளைக்கால் (PEG),** மற்றும்**பாலிசோர்பேட் 80**மற்றும் / அல்லது **ட்ரோமெத்தாமைன்**உள்ளிட்ட இந்த பொருட்களுக்கு சிலருக்கு ஒவ்வாமை இருக்கலாம் என்பதால் இந்த பட்டியலை கவனமாக மதிப்பாய்வு செய்வது முக்கியம்.. இருப்பினும், இவை அரிதாகவே ஒவ்வாமை எதிர்வினைகளை ஏற்படுத்துகின்றன. பாலிஎத்திலின் கிளைக்கோல் (PEG) மருந்துகள், கொலோனோஸ்கோபிக்கான குடல் தயாரிப்பு பொருட்கள், , மலமிளக்கிகள், இருமல் சிரப்புகள், காஸ்மெடிக்ஸ், சரும கிரீம்கள், சருமத்தில் மற்றும் அறுவை சிகிச்சைகளின் போது பயன்படுத்தப்படும் மருத்துவ பொருட்கள் மற்றும் டூத்பேஸ்ட், கான்டாக்ட் லென்ஸ்கள் மற்றும் கான்டாக்ட் லென்ஸ் சல்யூஷன் போன்ற தயாரிப்புகளில் காணப்படுகிறது. பாலிஎத்திலின் கிளைக்கோல் உணவு அல்லது பானங்களிலும் காணப்படுகிறது, ஆனால் உணவு அல்லது பானங்களில் இருந்து ஒவ்வாமை எதிர்வினைகளை ஏற்படுத்துவதாக அறியப்படவில்லை. பாலிசார்பேட் 80, மருத்துவத் தயாரிப்புகள் (வைட்டமின் எண்ணெய்கள், மாத்திரைகள் மற்றும் ஆன்டிகேன்சர் ஏஜெண்ட்டுகள் போன்றவை) மற்றும் காஸ்மெட்டிக்குகளில் காணப்படுகிறது. ட்ரோமெத்தமைன் என்பது வாய்வழி மற்றும் அல்லூண்வழி எனும் வேறுபட்ட வழியின் ஒரு பகுதியாகும்.

## தடுப்பூசியினால் ஏற்படும் பக்க விளைவுகள் என்ன?

அனைத்து தடுப்பூசிகளையும் போலவே, COVID-19 தடுப்பூசிகளும் பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம், இருப்பினும் எல்லோருக்கும் பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை மற்றும் அவற்றை அனுபவிப்பவர்களும் பெரும்பாலும் சிறிய அளவிலான பக்க விளைவுகளையே கூறுகிறார்கள். COVID-19 தடுப்பூசி பெற்ற பிறகு மிகவும் பொதுவாக தெரிவிக்கப்படும் பக்க விளைவுகளாவன ஊசி போட்ட இடத்தில் வலி, சிவந்துபோவது அல்லது வீக்கம், சோர்வு, தலைவலி, தசை வலி, மூட்டு வலி, குளிர், மற்றும் லேசான காய்ச்சல் உள்ளிட்ட குறிப்பிட்ட எதிர்விளைவுகள் ஆகும்.

இந்த COVID-19 தடுப்பூசிகள் பற்றிய தற்போதைய ஆய்வுகளானது, கடுமையான பக்க விளைவுகள் ஏற்பட்டதாக இன்றுவரை கண்டறியப்பட்ட நிகழ்வுகள் **மிகவும் அரிதே** என்பதைக் காட்டுகின்றன.

இந்த ஆய்வுகளில் தடுப்பூசியைப் பெற்றவர்களுக்கு ஏதேனும் நீண்ட கால பக்க விளைவுகள் ஏற்படுகிறதா என தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறார்கள்.

கடுமையான ஒவ்வாமை எதிர்விளைவு ஏற்பட்டால் அதை நிர்வகிக்க மருத்துவ ஊழியர்கள் தயாராக உள்ளனர். COVID-19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறும்போது, **இரண்டாவது டோஸை வழங்கும் சுகாதார வழங்குநரிடம் முதல் டோஸைப் பெற்ற பிறகு உங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் இருந்ததா என சொல்லுங்கள்.**

மிக அரிதாக, அஸ்ட்ராஜெனிகா / கோவிஷீல்ட் தடுப்பூசி பெற்ற பிறகு அரிதான இரத்த உறைதல் பிரச்சனையுடன் இந்த தடுப்பூசிகள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது மருத்துவர்கள் இதை “தடுப்பூசி தூண்டப்பட்ட புரோத்ரோம்போடிக் நோயெதிர்ப்பு இரத்த உறைவு” (VIPIT) என்று அழக்கின்றனர். இந்த இரத்தக் கட்டிகளில் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன: அவை தடுப்பூசி பெற்ற 4 முதல் 20 நாட்களுக்குப் பிறகு ஏற்படுகின்றன, மேலும் அவை குறைந்த பிளேட்லெட்களுடன் (இரத்தப்போக்கை நிறுத்துவதற்கு இரத்தக் கட்டிகளை உருவாக்க உதவும் சிறிய இரத்த அணுக்கள்) தொடர்புடையவை. VIPIT மிகவும் அரிதானது என்று தெரிகிறது, ஒவ்வொரு 125,000 நபர்களில் 1 நபருக்கு முதல் 1 மில்லியன் மக்களில் 1 நபர் என இவற்றுகிடையில் நிகழ்கிறது. இது 55 வயதிற்குட்பட்ட பெண்களுக்கு மிகவும் பொதுவாக ஏற்படக்கூடியதாகும். மேலும் தகவலுக்குஅஸ்ட்ராஜெனிகா COVID-19 தடுப்பூசியைத் தொடர்ந்து VIPIT என்பதைதயவுசெய்து பார்க்கவும் .

ஹெல்த் கனடா COVID-19 லிருந்து கனடா மக்களைப் பாதுகாப்பதில் அஸ்ட்ராஜெனிகா / கோவிஷீல்ட் தடுப்பூசியின் நன்மைகள் தொடர்ந்து அதனால் விளையும் அபாயங்களை விட அதிகமாக உள்ளன என்று இதை மதிப்பீடு செய்து தீர்மானித்துள்ளது. இரத்தம் உறைதல் குறிப்பாக வயதானவர்களுக்கு பொதுவாக நிகழக்கூடியதாகும். COVID-19 இரத்த உறைதலுடன் தொடர்புடையது, எனவே அனைத்து COVID-19 தடுப்பூசிகளும் கடந்த காலத்தில் இரத்த உறைவு ஏற்பட்டவர்களுக்கு அல்லது இரத்த உறைதல் குடும்ப வரலாற்றைக் கொண்டவர்களுக்கும்,

இரத்தத்தை மெலிதாக்கும் மருந்துகளைப் எடுத்துக்கொள்பவர்களுக்கும் தொடர்ந்து பரிந்துரைக்கப்படுகின்றன.

## எனது சுகாதார வழங்குநரை நான் எப்போது அழைக்க வேண்டும்?

உங்களைக் கவலைக்குள்ளாக்கும் அல்லது சில நாட்களுக்குப் பிறகும் உங்களை விட்டு செல்லக்கூடியதாகத் தோன்றாத பக்க விளைவுகளை நீங்கள் அனுபவித்தால், உங்கள் சுகாதார வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும் அல்லது மருத்துவ உதவியை நாடவும்.

தடுப்பூசியைப் பெற்ற மூன்று நாட்களுக்குள் பின்வரும் பாதகமான எதிர்விளைவுகள் ஏதேனும் நிகழ்ந்தால் அருகிலுள்ள **அவசரசிகிச்சைப் பிரிவுக்குச் செல்லுங்கள் அல்லது 911** ஐ அழையுங்கள்:

- தோல்வீக்கம்
- முகம் அல்லது வாயில் வீக்கம்
- மூச்சுவிடுவதில் சிரமம்
- மிகவும் வெளிறிய நிறம் மற்றும் கடுமையான மயக்கம்
- அதிக காய்ச்சல் (40°C க்கு மேலாக)
- வலிப்பு அல்லது பக்கவாதம்
- பிற தீவிர அறிகுறிகள் (எ.கா., “முள்களும் ஊசிகளும்” அல்லது உணர்வின்மை)

நீங்கள் அஸ்ட்ராஜெனிகா/கோவிஷீல்ட் தடுப்பூசியைப் பெற்றிருந்தால், தடுப்பூசியைப் பெற்றப் பிறகு பின்வரும் அறிகுறிகள் ஏதேனும் இருந்தால், **தயவுசெய்து உடனடி மருத்துவ உதவியை நாடுங்கள்**:

- மூச்சுத் திணறல்
- மார்பில் வலி
- ஒரு கை அல்லது காலில் வீக்கம் அல்லது குளிர்ந்த வெப்பநிலை
- தொடர்ச்சியான வயிற்று வலி
- கடுமையான அல்லது மோசமான தலைவலி அல்லது மங்கலான பார்வை

- பல்வேறு சிறிய சிராய்ப்புகள், சருமத்தின் கீழ் சிவப்பு அல்லது ஊதா புள்ளிகள் அல்லது இரத்த கொப்புளங்கள்

நீங்கள் உங்கள் உள்ளூர் பொது சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொண்டு கேள்விகளைக் கேட்கலாம் அல்லது பாதகமான எதிர்விளைவைத் தெரிவிக்கலாம்.

# எனது இரண்டாவது டோஸுக்கு நான் எப்போது திரும்ப வரவேண்டும்?

உங்களின் COVID-19 தடுப்பூசியின் முதல் டோஸ் இது என்றால், தடுப்பூசி கிளினிக் அல்லது உங்கள் முதல் டோஸை உங்களுக்கு வழங்கிய சுகாதார வழங்குநர் அறிவுறுத்தல்படி உங்கள் இரண்டாவது டோஸ் பெறுவதற்கு திரும்பவும் வருவதை உறுதி செய்யவும். இரண்டாவது டோஸ் தடுப்பூசி பெறும் வரை COVID-19 க்கு எதிரான பாதுகாப்பு ஏற்ற அளவில் இல்லை என்பதால் நீங்கள் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெறுவது முக்கியமாகும் நீங்கள் உங்கள் இரண்டாவது டோஸ் பெறுவதற்கு வரும்போது உங்கள் நோய்த்தடுப்பு மருந்து பதிவைக் கொண்டு வரவும். **நீங்கள் முதல் முறை போடும்போது பக்க விளைவுகளை அனுபவித்தாலும், இரண்டாவது டோஸைப் பெறுவது மிகவும் முக்கியம்** .

# என்னுடைய ஏதேனும் சந்தேகங்களுக்கு நான் யாரைத் தொடர்பு கொள்ள வேண்டும்?

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் சுகாதார வழங்குநருடன் அல்லது தடுப்பூசி வழங்கும் நபருடன் பேசுங்கள்.